விலைரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 சித்திரை 26 றஜப் 14 இதழ் 85

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 9—5—82

யாழ். மாவட்டசபை

## வைபவ அமர்வில் மும்மொழிகளிலும் கொள்கை விளக்கக் கூற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திசபையின் வைபவ அமர்வ சபை பணியகத்தில் இம் மாதம் 12-ம் தேதி காலை நடைபெறும்.

கொள்கை விளக்க கூற்றினை சபைத்தலைவர் திரு சு. நடராசா தமிழிலும், உதவி சங்க சேரிப்பாளரும் மேலதி இறங்குதுறை மதிப்பீட்டாளருமான திரு. எஸ் எம் ஜே. சேரைத்ன சிங்களத்திலும் அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா ஆங்கிலத்திலும் வாசிப்பார்கள்.

வேம்படி மகளிர்கல்லூரி மாணவிகளின் வாழ்த்துப்பாவும் இடம் பெறும். மாவட்ட செயலாளர் சபை தலைவருக்கு கொள்கை விளக்ககூற்றினை அளிப்பார்.

இவ்வைபவத்தில் எம்பிக்களும் மாவட்ட சபை உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள். (ச)

# ஆர்ஜென்டீனமீது பிரிட்டன் பதிலடி கொடுக்க முஸ்தீபு!

## 90 லட்சம் மக்களுக்கும் பாதுகாப்பு பிரசுரங்கள்

### தலைநகரில் இரவில் மின்துண்டிப்பு

புவனர்ஸ்அயர்ஸ், மே 8

போக்லண்ட் தீவுக்கு அண்மையில் இடம்பெற்ற போரில், பிரிட்டிஷ் நாசகாரி மூழ்கடிக்கப்பட்டதற்கு வஞ்சம் தீர்க்கும் நோக்குடன் ஆர்ஜென்டீனாவின்முக்கிய இராணுவநிலைகளைப் பிரிட்டன் தாக்கக் கூடுமென்பதால், விமானத் தாக்குதலிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான வழிவகைகள் குறித்து 90 லட்சம் ஆர்ஜென்டீன மக்களுக்கும் துண்டுப்பிரசுரம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை அடுத்து ஆர்ஜென்டீனவீதிகளில் இரவு நேரங்களில் மின் விளக்குகள் துண்டிக்கப்பட்டுள்ளன

### அமெரிக்கா அறிவிப்பு

ஆர்ஜென்டீன படைகள் வெளியேறுவிட்டால் போக்லண்ட் தீவில் மீண்டும் பிரிட்டன் தாக்குதல் நடத்துமென்றும் அதில் பிரிட்டனுக்கு வெற்றி கிடைக்கும் என்றும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

பிரிட்டிஷ் யுத்தவலயத்தை விஸ்தரித்துள்ளது. ஆர்ஜென்டீனாவின் விமானங்கள் கப்பல்கள், 12 மைல்களுக்கு அப்பால் செல்லக்கூடாது என பிரிட்டன் எச்சரித்துள்ளது.

### பிரிட்டனும் அறிவிப்பு

பிரிட்டிஷ் படைகள் மற்றொரு தாக்குதல் நடத்த விருப்பதாக பரிட்டிஷ் பாதுகாப்பு மந்திரி தெரிவித்தார். இதன் காரணமாகவே பிரிட்டன் முற்றுகை எல்லையை

[8ம் பக்கம் பார்க்க]

## டாக்டர் பசுபதி நினைவு சொற்பொழிவு இன்று

(யாழ்ப்பாணம்)

டாக்டர் வி. ரி பசுபதி நினைவுச், சொற்பொழிவு இன்று மாலை 6-30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

இவ்வைபவத்தில் வைத்திய கலாநிதி பி. சுப்பிரமணியம் சொற்பொழிவாற்றுவார்.

யாழ்ப்பாணம் மருத்துவச் சங்கம் இதனை ஒழுங்கு செய்துள்ளது, (கி)

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை ஏடு

"செங்கதிர்"

வெளியீட்டு விழா

காலம்:

9-5-1982 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 5-00 மணி

இடம்:

வீரசிங்கம் மண்டபம் - யாழ்ப்பாணம்

தலைமை:

திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் - பா. உ.

வெளியிட்டு வைப்பவ :

திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள்

எதிர்க்கட்சித் தலைவர்

ஏனைய பிரமுகர்களும் கருத்துரை வழங்குவார்கள்.

அனைவரும் திரண்டு வருக

வெளியீட்டுக் குழு

தெல்லிப்பழை 4-5-82

3137

சிறுமி கடத்தல், திருட்டு வழக்கு:

## குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரிக்கு 3 வருட கடூழியம்

(ஊர்காவற்றுறை)

எட்டு வயதுச் சிறுமியைக் கடத்தி. நகைகளைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 3 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது

இவ்வழக்கு, ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ரி. கே. என். திலகன் முன்னிலையில் நடைபெற்றது.

எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வழக்கில் அனலைதீவைச் சேர்ந்த வீரகத்திப்பிள்ளை சுப்பிரமணியம், அதேயிடத்தைச் சேர்ந்த அனுஷா என்னும் எட்டு வயதுச் சிறுமியை அனலைதீவிலிருந்து மாங்குளத்திற்குக் கடத்திச் சென்று 2825 ரூபா பெறுமதியான நகைகளைக் களவாடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

பிள்ளையைக் கடத்திய குற்றத்திற்கு 2 வருடக் கடுங்காவல் சிறைத் தண்டனையும்,

[8-ம் பக்கம் பார்க்க]

## மோட்டார்சைக்கிள்-வான் விபத்தில் ஒருவர் பலி!

[பண்டத்தரிப்பு]

வசாவிளான் மத்திய கல்லூரிக்கு முன்பாக நடைபெற்ற மினிபஸ் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி பலத்த காயங்களுடன் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் அங்கு மரணமானார்.

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனத்தில் உற்பத்தி முகாமையாளராக கடமையாற்றும் வி. எஸ். இராமலிங்கம் என்பவரே இவ்வாறு இறந்தவராவார்.

கடந்த மாதம் 25-ம் திகதியன்று பிரஸ்தாப நபர் தமது மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் கோண்டாவிலிலுள்ள தமது வீட்டிலிருந்து வசாவிளானிலுள்ள சகோதரி வீட்டுக்கு சென்றதாகவும் சகோதர் வீட்டில் தமது மனைவியை இறக்கிவிட்டுத் தனியாக மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த போது, மினி பஸ் ஒன்று அவரை மோதியதாகவும்,

[8-ம் பக்கம் பார்க்க]

## கோவிலால் திரும்பிய பெண்ணின் சங்கிலி அபேஸ்

[கோண்டாவில்]

ஆலயத்தில் இருந்து வீடு திரும்பிய பெண்ணின் சுமார் 000 ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலி சைக்கிளில் வந்த இரண்டு வாலிபர்களினால் அறுத்துச்செல்லப்பட்டது.

இச்சம்பவம் நாச்சிமார் கோவிலுக்கு அண்மையில் நடைபெற்றது.

நாச்சிமார் கோவில் திருவிழா முடிந்து இரவு 8-30 மணிபோல் வீடு திரும்பிய பெண்ணின் வீட்டுப் படலையில் வைத்து இச்சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டது.

இதுபற்றி பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

## நெடுந்தீவில் கைதான அறுவரில் நால்வர் விடுதலை!

[யாழ்ப்பாணம்]

பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகத்தின் பேரில் நெடுந்தீவில் வைத்து கைது செய்யப்பட்ட 6 பேரில் நேற்று நால்வர் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மற்றும் இருவர் குருநகர் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை, நெடுந்தீவு துறைமுகத்தை அண்மித்துள்ள பகுதிகளை இராணுவத்தினர் சோதனையிட்ட போது சந்தேகத்தின் பேரில் இந்த 6 பேரும் கைதுசெய்யப்பட்டார்கள்.

இவர்களிடமிருந்து துப்பாக்கிகள் போலி விளையாட்டுத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன என்று கூறப்படுகிறது.

முன்னாள் கிராமசபைத் தலைவர் த. அம்பலம், சி. கருணாநிதி, அ. பொன்னம்பலம், ஏ. சி அழகரத்தினம் ஆகியோரே விடுதலைசெய்யப்பட்டவராவர்.

அம்பலம் சுதாகரன், ராஜயோகன் ஆகிய இருவரும் தொடர்ந்தும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (க-இ)

# "சங்கரா யார் கொலோ சதுரர்"

கதக்கின் பிரிஜு மகராஜ், ஒடிஸியின் சன்யுக்தா பாணிக்ரஹி பரதத்தின் பத்மா; இவர்களில் 'யார் கொலோ சதுரர்?'

மணிவாசகர் இறைவனைப் பார்த்துக் கேட்டவாறுதான் நாமும் கேட்கவேண்டியதாயிற்று.

கதக், ஒடிஸி, பரதம்; இவற்றில் எது சிறந்தது?

எல்லாமே 'சொக்க'வைத்துவிட்டன.

முதலில் கதக் நடன மேதை பிரஜு மகராஜின் செய்முறை விளக்கமும் நிகழ்ச்சியும். பின்னர், ஒடிஸியின் பிரசித்தி பெற்றசன்யுக்தா பாணிக்ரஹியின் நிகழ்ச்சியும் செய்முறை விளக்கமும்.

இவற்றின்போது பத்மாவின் விளக்கங்களும், பின்னர் அவரின் நிகழ்ச்சியும் அனைத்துமே ஒன்றை ஒன்று விஞ்சாதன. 'கதக் நடனத்தின் வரலாறும் நுட்பமும்' என்பது பற்றி பிர்ஜு மகராஜ் மாநாட்டில் செய்முறை விளக்கமளித்தார். தன்னுடையமேதாவிலா பிர்ஜு மகராஜ் அங்கு காண்பித்தார். அவ்வேளை, பரதர் ஆங்கிக அபிநயம், முகபாவம் ஆகியவற்றின் பகுதியாகவே நிருத்தத்தை கொள்கிறார் என்று பத்மா விளக்கமளித்தார். கதக்கில் உபயோகப்படுத்தப்படும் பலஅபிநய முத்திரைகள் நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிருத்த ஹஸ்தங்கள் சிலவற்றை ஒத்திருக்கின்றன என்பதையும் பத்மா அங்கு காண்பித்தார். சுவையான இந்த செய்முறை விளக்கம் அவையில் பெரும் லயிப்பை ஏற்படுத்தியதில் வெகுநேரம்வரை நீடித்தது. மறுநாள் சன்யுக்தா பாணக்ரஹி.

மேடையில் தோற்றியதுமே, 'நேற்று பிர்ஜு மகராஜின் அற்புதமான அந்த செய்முறை விளக்கத்தை நீங்கள் பாத்திருந்தபோது, என்னுடையது எங்கே எடுபடப் போகிறது?'' என்றார், சன்யுக்தா! உண்மையில் நமக்குங்கூட அப்படித்தான்ஓர்உணர்வு இருந்தது ஆனல்...? அதே

## பாருக்குள்ளே நல்ல நாடு - 15

சத்தை அவர் அடக்கமாக வெளிப்படுத்திக்கொண்டிருந்தபோது, அன்று அவை அடக்க முடியாத ஆரவாரமடைந்து கொண்டிருந்தது.

உத்தரப் பிரதேசத்தின் சில பழைய கிராமங்களிலிருந்து கதக் நடனத்தில் அந்நாள்களில் அணியப்பட்ட உடைகள் சிலவற்றையும் அவர் கொண்டுவந்திருந்தார்; அவற்றில் ஏற்பட்ட மாற்றங்களை அவர் தெரிவித்தார்.

அந்த உடைகளில் அவரது தந்தையார் லட்ஜு மகராஜ் அணிந்த உடைகளும் இருந்தன. 'அவற்றை அணியுங்கள் பார்க்கலாம்' என்று அவையிலிருந்து ஆசையோடு குரல்கள் எழுந்தன.

என்ன 'தலைக்கனம்' அவருக்கு? அந்த ஆசையை அவர் நிறைவேற்றமறுத்துவிட்டார்.

'அந்த மேதையினுடைய ஆடையை அணியும் அருகதை எனக்கு இல்லை; நான் அணிய மாட்டேன்' என்று அவர் மிகுந்த அடக்கத்தோடு கூறியதும் அனைவருமே அதிர்ந்து போய்விட்டார்கள்! அடக்கம் நிறைந்து அவர் தலை 'கனத்தது'!

நிருத்த அம்சங்களாலும் உணர்ச்சி வெளிப்பாட்டை காண்பிக்கமுடியும். என்பதை அமோக 'அப்ளாஸ்'?

கதக்கில் பிர்ஜு மகராஜ் அபிநயித்துக்காண்பித்த மயில் யானை போன்ற சிலவற்றை சன்யுக்தா ஒடிஸியில் காண்பித்தார்: அற்புதம்! அற்புதம்!!

அது ஒரு விதம்; இது ஒரு விதம். எதை எது விஞ்சுகிறது என்று சொல்லமுடியாத விந்தை!

மாநாட்டில் தன்னுடைய நிகழ்ச்சியிலே பத்மாவும்

– மாலி –

இவற்றைக் காண்பித்தார்; அதுவும் அபாரமே இடையே கதகளியில் இவற்றில் ஒரு கோபிநாத்தின் அசகாய சாகசத்தையும் குறிப்பிட்டார்கள். ஆக, இந்த மேதைகள் அனைவரினதும் இந்த செய்முறை விளக்கங்கள் இந்திய கலைசள்- நடனங்கள் அனைத்தினதும் தன்மையை – உள்ளுணர்வை- ஒருங்கிணைப்பை அப்படியே தெற்றென – எளிதாக உணர்த்திவிட்டன என்றே சொல்லலாம்.

[அடுத்த இதழில் முடிவடையும்]

# ஊர்காவல் படை அமைப்பு வேலைகள்

[வவுனியா]

ஊர்காவல்படை அமைக்கும் வேலைகள் வவுனியாவில் நடைபெறுகின்றன.

16—40 வயதுக்குட்பட்டவர்களுக்கே இந்நியமனம் வழங்கப்படவுள்ளது எனஅரசாங்க அதிபர் திரு.கே.ஸி. லோகேஸ்வரன் தெரிவித்தார்.

ஒவ்வொரு கிராமசேவையாளருக்கும் 1000 விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது கிராமசேவையாளர் சிபார்சில் பகுதி எம். பியும், மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவரும் ஊர்காவல்படை தொண்டர்களை தெரிவு செய்வார்கள்.

வவுனியா மாவட்டத்தினை பொறுத்தவரை இந்நியமனம் எதிர்வரும் 15ம் திகதிக்குமுன் வழங்கப்பட்டுவிடுமென அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கூட்டணி வவுனியா எம்.பி. யின் சிபார்சில் பத்துபேருக்கு விசேடசேவை அதிகாரிகள் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

விசேடசேவைஉத்தியோகஸ்தர்களுக்கான மூன்றுநாள் பயிற்சி வகுப்பு வவுனியா கச்சேரியில் அண்மையில் நடைபெற்றது.

இப்பயிற்சி வகுப்பில் அரசாங்க அதிபர் திரு. கே.சி. லோகேஸ்வரன் ''பொது மக்களுடன் நல்லமுறையில் பிணக்குகள் இன்றி பழகவேண்டும் என்றும் பாரபட்சமின்றி இனமொழிமத வேறுபாடின்றி சேவையாற்றவேண்டும் என்றும் பல இலாகாக்களுக்கும் தொடர்பு கொள்ளும்போது முரண்பாடு இல்லாமல் சேவையாற்ற வேண்டும் மெனவும் கேட்டுக்கொண்டார்.

இப்பயிற்சிவகுப்பில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. குணநாயகம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கமலநாதன், திட்டமிடல் அதிகாரி திரு. ரங்கராசா ஆகியோர் உரையாற்றினர்.

# தமிழரின் சுதந்திர தாகத்தை தாரைவார்த்து விட்டார்கள்!

## கூட்டணித்தலைவகள் மீது கோவைமகேசன் தாக்கு

(நல்லூர்)

தமிழ் இனத்தின் சுதந்திர தாகத்தை–இறைமையை சிங்கள ஏகாதிபத்திய அரசிடம் தாரை வார்த்துவிட்டார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் ''இவ்வாறு நேற்று முன்தினம் நல்லூர் சங்கிலியன் மன்றத் திறந்த வெளியரங்கில் இடம்பெற்ற பௌர்ணமிக் கலை விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய திரு. கோவை மகேசன் கூறினார்.

நிலையத் தலைவர் திரு. கனகேசவன் தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

சங்கிலி மன்னன் தமிழ் ஈழத்தை 1899ல் போர்த்துக்கேசரிடம் போராடிப் பறிகொடுத்த இறைமையை, சுதந்திரத்தை, சுய ஆட்சியை நிர்ணயிக்க 76ம் ஆண்டுமுதல் தமிழ் மக்கள் போராடி வருகிறார்கள். ஸ்ரீலங்கா ஒரு நாடு அல்ல. ஸ்ரீலங்கா தமிழ் ஈழம் என்ற இரு நிலப்பரப்புக்களை வெள்ளைக்காரன் இணைத்து வைத்தான் என்பது எமது கொள்கை'.

இந்திய உப கண்டத்தில் விடுதலைக்காகப் பாடுபட்ட பாரதியை சிந்திக்கின்றவர்கள் அவன் பாடல்கள் இந்திய மக்களை, தமிழ்நாட்டை மட்டுமல்ல விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற சகல மக்களுக்கும் வலுவை, திராணியை, தெம்பை, உற்சாகத்தை. உத்வேகத்தை, உணர்வை ஊட்டக்கூடியவை. அவன் கூறுகிறான்'' வீர சுதந்திரம் வேண்டி நின்றோர், பின் வேறொன்று வேண்டுவரோ' அமுதத்தினை உண்டு களித்தவர்கள் கள்ளுண்டு களிப்பரோ தமது இரு கண்களையும் விற்றுவிட்டு ஒருவன் ஓவியம் வாங்குவானோ இன்று நடப்பது என்ன? 77ல் தமிழ் ஈழ அரசு ஒன்றே தமிழர்களின் பிரச்னைகளுக்குக் தீர்வு என்று மக்கள் தீர்ப்பளித்தார்கள். குடியேற்றம்,- வேலைவாய்ப்பு- இடமாற்றம்–அபிவிருத்தி என்றாலும் சரி, இராணுவத்தின் கெடுபிடிகளினுல் ஒடுக்கப்பட்ட இனத்தின் இறுதிவழி, தமிழ் ஈழம்தான் என்று தீர்ப்பளித்தார்கள். அன்று சர்வஜன வாக்குரிமை என்று பிரகடனப்படுத்தப்பட்டது. எங்கும் சுதந்திரம் என்ற உணர்வு பிறந்தது வீட்டிற்கு வீடு இளைஞர்கள் ஒன்றுபட்டு விடுதலை உணர்வால் தங்கள் ஆணையை தமிழ்த் தலைவர்களிடம் கொடுத்தார்கள். புனிதமான ஆணையைப் பெற்றவர்கள் அதை நிறைவேற்ற முடியாவிட்டால் மக்களிடம் விடவேண்டுமே தவிர மக்களை அடிமைகளாக்கக் கூடாது. தந்தை செல்வா இதைத்தான் சொன்னார் ''என்னுடைய காலத்தில் எமது இலட்சியம் கைகூடாவிட்டாலும் எனக்குப் பின் பல தியாகிகள் இலட்சியத்தை முன் எடுத்து செல்வார்கள். என்றார். அவருடைய காலத்தில் கைகூடவில்லை. அவர் செய்த உடன்படிக்கைகள்–ஒப்பந்தங்கள்உதாசீனப்படுத்தப்பட்ட நிலையில் தமிழ் ஈழம்தான் முடிந்தமுடிவென முடிவு செய்தார்கள். அந்த லட்சியத்தை தந்தை செல்வாவிடம் பெற்றவர்கள் அப்படி நடக்கிறார்களா? மக்கள் எதற்கு வாக்களித்தார்கள்? பள்ளிக்கூடங்களுக்கா? அபிவிருத்திக்கா? அல்லது அமைச்சர் காமினி திசநாயக்காவிற்கு மாலைசூடவா? இதை நாம் கேட்பது ஸ்ரீலங்காவின் பாராளுமன்றத்திற்கு செல்வதற்காக அல்ல. இந்தமண்ணை நேசிப்பவர்கள். இனத்தை நேசிப்பவர்கள் நாங்கள். கடந்த தேர்தலின்போது இது நாம் நிற்கும் கடைசித் தேர்தல் இனி ஒருதேர்தல் என்றால் அது தமிழ்ஈழத்தில்தான் என்றவர்கள். கொழும்பு இராம கிருஷ்ண மண்டபத்தில் பேசும்போது இனி ஒருதேர்தல் என்று நாங்கள் வந்தால் எங்களை அங்கொடைக்கு அனுப்புங்கள் என்றார்கள். இன்று சிங்கள அரசிடம் சரணாகதி அடைந்துவிட்டார்கள்.

''நெஞ்சில் உரமும் இன்றி நேர்மைத்திறமும் இன்றி வஞ்சனை கொள்வாரடி கிளியே வாய்ச்சொல்லில் வீரரடி'' என்றான் பாரதி. நமது வாய்ச்சொல் வீரர்கள் இங்குதான் தாம் சொன்னதை செய்ய முடியவில்லை என்றால் வெளிநாடுகளில்வாழுகின்ற நம்மவர்கள் உலக நாடுகளின் ஆதரவுகளைத் திரட்டி ஒருதலைப்பக்க சுதந்திரப் பிரகடனத்தை அறிவித்தவுடன்- அதை ஏற்றுக்கொள்ளாதவர்கள். இந்த சுதந்திரப் பிரகடனத்தின் மூலம், தமிழ்மக்கள் பல இன்னல்களை அனுபவிக்க நேரிடும் என்றும் மக்களை பாதுகாக்க வேண்டியது தமது பொறுப்பு என்றும் குரல் கொடுக்கிறார்கள். இது வெற்றுப்பேச்சு. ஜே.ஆருடன் இணைந்து இலட்சியத்தை மறந்துவிட்ட இவர்கள் எப்படி இந்தபிரகடனத்தை ஆதரிக்க முடியும்– இன்று வைகுந்தவாசனைத் திட்டுகிறார்கள். ஐக்கியநாடுகள் சபையின் முன் தமிழர் நிலையைப் பறைசாற்றிய வைகுந்தவாசனைப் பாராட்டியவர்கள் இவர்கள். ஒன்றை மட்டும்சொல்லிவைக்கஆசைப்படுகிறேன். தமிழ் மக்கள் சலுகைகளுக்காக வாக்களிக்கவில்லை. தமிழினம் பட்ட துன்பங்களை– துயரங்களை – கொடுமைகளை – சித்திரவதைகளை, இளைஞர்கள் தமது உயிர்களை இழந்தார்கள். தமிழ் இனம் எத்தனை சொத்துக்களை உயிர்களை–பெண்களின் கற்புக்களை இழந்தது–இவற்றிற்கு விடிவு காண– விடுதலை காணவே மக்கள் வாக்களித்தார்கள். 56ம் ஆண்டிலிருந்து விடுதலைக்காக மக்கள் வாக்களித்தார்கள். சலுகைகளுக்காக தேர்தலில் நின்றவர்களை மக்கள் நிராகரித்தார்கள், அவர்களின் மூலம் பதவிகளைப்பெற்றவர்கள் கூட அவர்களை நிராகரித்தார்கள் அபிவிருத்திக்காக அல்ல விடுதலைக்காகவே மக்கள் வாக்களித்தனர். அபிவிருத்தி அபிவிருத்தி என்கிறார்களே எங்கே நடக்கிறது அபிவிருத்தி. அமரர் கதிரவேலுப்பிள்ளை அடிக்கடி சொல்வார் சுதந்திரமும் – அபிவிருத்தியும் ஒரு நாட்டில் கைகோர்த்து செல்ல முடியாது என்று,

விடுதலை வேண்டி நிற்கும் நாடுகளின் தொழிற்சாலைகள் எரிக்கப்பட்டதை அழிக்கப்பட்டதை உலக நாடுகளைபார்த்தால் தெரியும். விடுதலையின் பின்பே அபிவிருத்தி வியட்னாமியரைப் பாருங்கள் 20 ஆண்டுகள் போராடினார்கள். அதைவிட்டு சுதந்திரமும் அபிவிருத்தியும் வேண்டும் என்றால் அமரர் வன்னியசிங்கம் கூறியதுபோல் ''நக்குண்டார் நாவிழந்தார்' என்ற நிலையில் தமிழ் தலைவர்கள் சிங்களஏகாதிபத்திய அரசிடம் நக்குண்டுவிட்டார்கள்.

தமிழ் மக்கள் சிந்திக்க தொடங்கிவிட்டார்கள். தலைவர்கள் தங்கள்நிலையைமறந்துவிட்டார்கள். இப்படிப்பட்டவர்களை நம்பியிருந்தோமே என்று எண்ணும் போது வெட்கமாக இருக்கிறது. 7ம் திகதி வெளிவந்த ஒருபத்திரிகையில் மூன்றுதாக்குதல்களை தந்திருக்கிறார்கள். ஒன்று என்னை சுதந்திரனில் அமிர்தான் சேர்த்துவிட்டாராம். 57ம் ஆண்டு அமரர் வன்னியசிங்கம் தான் என்னை தந்தை செல்வாமுன் நிறுத்தி இவருக்கு உங்கள் பத்திரிகையில் இடம் கொடுங்கள் எதிர்காலத்தில் சிறந்த எழுத்தாளனுக வருவார் என்றார். அதற்கு தந்தை அவர்கள் இப்பொழுது இடம் இல்லை, பெயரைக்குறித்து வைத்து பின்சொல்லி அனுப்புகிறேன் என்றார். சரி அமிர்தான் சேர்த்துவிட்டார் என்றாலும் கூட தவறுகளைச்சுட்டிககாட்டுவதுதான் பத்திரிகாதர்மம். இவர்களது சர்வாதிகாரப் போக்கை கண்டித்து எழுதக்கூடாது, அப்படி எழுதும் பத்திரிகைகளுக்கு பயமுறுத்தல் தந்தை செல்வா சொல்வார் எந்தப்பாராளுமன்ற உறுப்பினராவது தவறுசெய்தால் அவரை தயங்காமல் கண்டித்து எழுதுங்கள் என்று ஆணையிட்டிருந்தார்கள். இன்று எனது பத்திரிகையால் வளர்ந்தவர்கள் எனது எழுத்து வண்மையால் எனது முழுத்திறனையும் பயன்படுத்தி என் பேனவின் சக்தியால் இவர்களை நம்பும்படி மக்களை செய்தவன் என்ற காரணத்தால் இன்று நான் ஒரு குற்றவாளி, எம்மைப் பார்த்து கட்டிவளர்த்த இயக்கத்தை உடைக்கிறோம் என்கிறார்கள். தந்தைசெல்வாவின் கட்டளையை மறந்து சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு சேவகம் செய்யும் இயக்கம் எதற்கு கொள்கை பிறழ்ந்த இயக்கம் உயிரற்ற உடலுக்கு – பிணத்திற்கு சமம். வள்ளுவன் சொன்னான். தலையில் இருக்கும்வரைதான் மயிருக்குப் பெருமை அது உதிர்ந்து விட்டால் எப்படி மதிப்பின்றிப் போய்விடுகிறதோ அதே போன்று கொள்கை பிறழ்ந்தவர்களது நிலையும் லட்சியத்தை மறந்தவர்கள் மக்களை ஏமாற்ற முடியாது. நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் திரு. கதிரவேலுப்பிள்ளை இயக்கத்தை இவர்கள் குட்டிச்சுவராக்கி விடுவார்கள் எனவே இயக்கத்தை எம்மை வழி நடத்துமாறு சொன்னார்கள்.

ஈழவேந்தனைப்பற்றிச்சொன்னார்கள் அவருக்கு பென்சன் பெற்றுத்தர உதவினாராம் எதற்காக ஈழவேந்தனின் பதவி பறிபோயிற்று அலகாபாத்தில் இடம் பெற்ற இந்து மகாநாட்டில் கலந்து கொண்டு இந்துக் கோவில்கள் இடிக்கப்பட்ட நிலையை பிரதிபண்ணிக்கொடுத்ததோடு, நிலைமைகளை நேரிலும் எடுத்துச் சொன்னார். அதனுலேயே அவர் பதவி விலக்கப்பட்டார். பின்னர் சிறையும் வைக்கப்பட்டார். அப்படிப்பட்ட ஈழவேந்தனுக்கு பென்ஷனுக்கு உதவி செய்திருக்கலாம். நான் ஈழவேந்தனிடம் இதுபற்றிக் கேட்டபோது அவர் சொன்னார் ''திரு. அமிர்தலிங்கம் தன்னைக்காணுகின்றபோதெல்லாம் தம்பி நான் நிதிமந்திரியிடம் உமது விடயமாக பேசியுள்ளேன். பென்ஷன்கிடைத்ததும் நீர் இந்தியா சென்று இயக்கவேலைகளில் ஈடுபடும் என்று கூறினார் என்றார். அதேவேளை நோய்வாய்ப்பட்டு ஒரு கால் கழற்றப்பட்ட நிலையிலும் திரு. கே. சி. நித்தியானந்தா ஈழவேந்தனுக்கு வேண்டிய சட்ட ஆலோசனைகளை வழங்கி அவரது விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து பெரும்உதவி புரிந்தார் என்ற உண்மை யாருக்குமே தெரியாது. இன்று குட்டிமணி, ஜெகன் போன்ற இளைஞர்கள் தலைகீழாக கட்டி தொங்கவிடப்பட்ட நிலையில் படும் சித்திரவதைகளை மறந்து–அவர்களின் அவலநிலைகளை மறந்து ஈழ

(7ம் பக்கம் பார்க்க)

# ஆர்ஜன்டீனு மீதும் பிரிட்டன் குண்டுவீச தயங்காதாம்!

## புதிய யுத்தவலயம் பிரகடனம்

லண்டன், மே. 8

**ஆர்ஜென்டீனு கரையிலிருந்து 12மைல்களுக்கப்பால் யுத்தவலய பிரதேசமாக பிரிட்டன் பிரகடனப்படுத்தியுள்ளது,**

இவ் யுத்த வலயப்பிரதேசத்தில் காணப்படும் எந்தக் கப்பலேயும் பிரிட்டன் மூழ்கடிக்கும். இப்புதியயுத்தவலய பிரதேசம்குறித்து ஆர்ஜென்டீனு ஐ. நா. விடம்முறையிட்டுள்ளது.

முன்பு போக்லண்டைச்சுற்றிய 200 மைல் பிரதேசத்தையே 'பிரிட்டன் யுத்தவலயமாகப் பிரகடனப்படுத்தியிருந்தது.

போக்லண்ட் பிரச்னேயில் பிரிட்டன் ஆர்ஜென்டீனுவுக்கு எதிராக கடும் இராணுவநடவடிக்கை எடுத்துள்ளது.

ஆர்ஜென்டீனு ஐ. நா. பிரதிநிதியான திரு. ரோக்கா பிரிட்டனின் யுத்தவலய விஸ்தரிப்புப் பற்றியும், பிரிட்டனின் கடுமையான இராணுவ நடவடிக்கை குறித்தும் ஐ.நா. செயலாளரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

ஆர்ஜென்டீனு மீது குண்டு வீசித் தாக்குதலே நடாத்துதல் பிரிட்டனிற்குத் தவிர்க்கமுடியாதொன்ருகி வருகிறதென பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் திரு. பிம் நேற்றுப்பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பிரதிநிதிகள் கரகோஷம் செய்து இவரது பேச்சை வரவேற்றனர். பிரிட்டிஷ் நாசகாரியை ஆர்ஜென்டீனு தாக்கியது குறித்து பிரிட்டிஷ் அமைச்சர்களும், எம். பி. க்களும், பொதுமக்களும் ஆத்திரமடைந்துள்ளனர்,

**பூமியதிர்ச்சி**

இதற்கிடையில் போக்லண்ட் தீவின் மேற்குக்கரையில் பூமியதிர்ச்சி ஏற்பட்டதென அமெரிக்காவிலிருந்து செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நேரத்தில் பிரிட்டன் யுத்த விமானமான 'தீகாரி' விமானங்களை போக்லண்ட் தீவுகளுக்கு அனுப்பியுள்ளது. இவ் விமானம் வானத்தில் தாக்கக்கூடிய நவீன ஏவுகணைகளைக் கொண்டுள்ளது.

பிரிட்டன் இராணுவமுற்றுகையை அதிகரித்தது குறித்து அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது. காலனித்துவ முறையை மீண்டும் ஏற்படுத்த பிரிட்டன் அவாக் கொண்டுள்ளதென சோவியத்பிரிட்டனின் இராணுவ முற்றுகை அதிகரிக்கப்பட்டுள்ளது குறித்து கருத்துத் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட நாடுகளே போக்லண்ட் பிரச்னேக்குதீர்வு காணவேண்டுமென கல்கத்தாவில் இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் யுத்தக்கப்பலான ஷெபில்ட் இன்னும் எரிந்து கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறதென நேட்டோ நாடுகளின் தளபதி தெரிவித்துள்ளார். (கு)

### மாலே. ஜனதிபதி பிரிட்டன் விஜயம்

பிரிட்டிஷ். மே. 8

மாலேதீவு ஜனதிபதி திரு. அப்துல் ஹியூம் இன்று பிரிட்டன் பயணமாகின்ருர்.

மாலேதீவு பொதுநல நாடுகளில் சேர்வது குறித்து பிரிட்டிஷ் தலேவர்களுடன் ஜனதிபதி திரு, அப்துல் ஹியூம் பேச்சுவார்த்தை நடத்துவார்,

(6ம் பக்கம் பார்க்க)

### நீதியரசர்கள் ஜனதிபதி சந்திப்பு

மனிலா, மே 8

இராஜினுமாச் செய்த பதினெரு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் பிலிப்பைன்ஸ் ஜனதிபதி திரு மார்கோசை நேற்று ஜனதிபதியின் அலுவலகத்தில் சந்தித்தனர்.

நீதிபதிகளே நியமிப்பதும் நீக்குவதும் ஜனதிபதியின் அதிகாரத்திற்குட்பட்டபடியால் இந் நீதியரசர்கள் திரும்பவும் நியமிக்கப்படலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன.

சட்டப்பரீட்சை யொன்று தொடர்பாக தெவிக்கப்பட்ட புகாரையடுத்தே பிரதம நீதியரசர் உட்பட பதினெரு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ராஜினுமாச்செய்தமைதெரிந்ததே.

## ஆஸ்திரேலிய அமைச்சரவையில் மாற்றம்

மெல்போன், மே. 8

ஆஸ்திரேலிய பிரதமர் திரு. மல்கம்பிரேசர் அமைச்சரவையை மாற்றியமைத்துள்ளார்.

கலர் தொலேக்காட்சி கடத்தலில் இருஅமைச்சர்கள் ஈடுபட்டு பதவி விலகியதைத் தொடர்ந்தே அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது இருபுதிய அமைச்சுக்களும் உருவாக்கப்பட்டுள்ளனர்

இரு அமைச்சர்கள் ஹொங்கொங்கிலிருந்து அவுஸ்திரேலியாவிற்குத் திரும்பும்போது அவுஸ்திரேலியா சுங்கப்பகுதியினருக்கு இரண்டு கலர் தொலேக்காட்சிப் பெட்டிகளே 'டிமிக்கி' கொடுத்து கொண்டுவந்தது பாராளுமன்றத்தில் சூடுபிடித்து இரு அமைச்சர்கள் இராஜினுமாச் செய்தது தெரிந்ததே. (கு)

### அமெரிக்காவில் வேலேயில்லாத் திண்டாட்டம்

வாஷிங்டன், மே.8

அமெரிக்காவில் தற்போது 1 கோடி 30 லட்சம் பேர் வேலேயின்றி இருக்கின்றனர் என்று கடந்த மாதம் எடுக்கப்பட்ட புள்ளி விபரம்ஒன்று தெரிவிக்கின்றது.

1 41, 42ம் ஆண்டுக்குப் பின்னர் இப்போதுதான் அமெரிக்காவில் வேலேயில்லாத் திண்டாட்டம் படு மோசமான நிலேக்கு வந்துள்ளது என்று அமெரிக்க தொழிற் திணைக்களம் தெரிவித்துள்ளது. [ ]

### அமெரிக்க ஜனதிபதிதேர்தலில் போட்டியிடேன்

வாஷிங்டன், மே. 8

எட்வேட் கென்னடி அமெரிக்க ஜனதிபதித்தேர்தலில் போட்டியிட விரும்புவதாக அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது ஆனல் அவர் இதைமறுத்து தான் மீண்டும் செனட்டர் பதவிக்கே போட்டியிடுவேன் என கூறியுள்ளார். ஒருமாத காலமாக பொது இடங்களில் கருத்தரங்குகளே நடாத்தி அணுஆயுதஉற்பத்தியை கண்டித்து வருவதுடன் தொலேக்காட்சியிலும் தோன்றி இக் கருத்தை வலியுறுத்திவருகின்ருர். (கு)

## மேற்கு வங்கத்தில் இந்திரா சூறுவளி தேர்தல் பிரசாரம்

கல்கத்தா, மே. 8

இங்கு நடைபெற உள்ள சட்டசபைத்தேர்தலேயொட்டி பிரதமர் இந்திராகாந்தி சூறுவளித்தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

தேர்தல் வன்செயல் தொடர்பாக 4 பேர் மரணமானது குறித்து வன்மையாகக் கண்டித்த பிரதமர் இந்திரா மேற்கு வங்காளத்தில் உள்ள எதிர்க்கட்சியினரை ஒழித்துக் கட்டும் செயலில் மார்க்ஸிய வாதிகள் இறங்கியுள்ளனர் என குற்றஞ்சாட்டினர்.

ஆனந்தமார்க்கத்தினர் மத்தியில் மார்க்ஸியவாதிகளின ஊடுருவல் அதிகரித்துள்ளதாகவும் குற்றஞ்சாட்டினர்.

பிள்ளே கடத்தலில் ஆனந்த மார்க்கத்தினர் ஈடுபடுவதாக இந்தியாவில் பலத்த புகார் எழும்பியுள்ளதும் அண்மையில் 3 பிள்ளேகளேக் கடத்திச் செல்லும்போது ஆத்திரமடைந்த பொதுமக்கள் ஆனந்த மார்க்கத்தினர் பலரைத் தாக்கிக் கொலேசெய்ததும் தெரிந்ததே.

மேற்கு வங்காள சட்டசபைத் தேர்தல் அலுவல்களே கவனிக்கும் பொருட்டு தலேமைத் தேர்தல் அதிகாரி திரு. சக்தார் இங்கு வந்து சேர்ந்துள்ளார். தேர்தலே சுலபமாக நடைபெற சகல கட்சிகளின் ஒத்துழைப்பை திரு. சக்தார் கோரியுள்ளார்.

ஜம்மு, காஷ்மீர் பிரதேசத்தில் சுற்றுப்பிரயாணத்தில் ஈடுபட்டிருந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி பாரத துருப்புகள் மத்தியில் உரையாற்றுகையில் போர் ஏற்படும்பட்சத்தில் இராணுவம் மட்டுமல்ல பொதுமக்களும் போரில் பங்களிப்பு செய்ய வேண்டியேற்படுமெனக் குறிப்பிட்டார்.

மேற்கு வங்காளத்தில் திரு. ஜோதிபாசு தலேமையிலான மார்க்ஸிய கட்சி ஆட்சி புரிவது தெரிந்ததே. [கு]

## திரைப்படகுழு பஸ் விபத்து: சடலங்களே கொண்டுவர தமிழ்நாடுஅரசு நடவடிக்கை

சென்னே. மே, 8

ஹிமாலயப் பிரதேசத்தில் உள்ள விளாஸ்பூரில் நிகழ்ந்த பஸ் விபத்தில் இறந்தவர்களின் சடலங்களே சென்னேக்கு கொண்டுவர தமிழ்நாடு தலேமைச்செயலாளர் திரு. கே. திரவியம் நடவடிக்கையெடுத்துள்ளார்.

ஹிமாலயப் பிரதேசத்தில் படப்பிடிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழ்நாட்டைச்சேர்ந்த திரைப்படக்குழுவொன்று பஸ்விபத்தில் சிக்கியது தெரிந்ததே.

இவ்விபத்தில் 7பேர் ஸ்தலத்திலே மரணமாயினர். ஒருவர் விளாஸ்பூர் ஆஸ்பத்திரியில் மரணமானர். காயமுற்ற 28 பேரில் 3பேரின் நிலேமை கவலேக்கிடமாக உள்ளது,

மரணமானவர்களும், காயமடைந்தவர்களும் திரைப்பட நுட்பவியலாளர்கள் என அறியவருகிறது. (கு)

மக்கள் மனம்கவரும் பல்வேறு பொருட்களே நியாயவிலேயில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்

மின்சார உபகரணங்கள், மின்னியல் பொருட்கள், காகிதாதிகள், பாடசாலே உபகரணங்கள்,

அன்பளிப்புப் பொருட்கள் அனேத்திற்கும்

அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகளும், மின்சார ஒப்பந்தகாரரும், விற்பனேயாளரும்)

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(போன் : 8291 தந்தி : ''வாணர்சன்ஸ்''

(கடைத்தெரு பிள்ளேயார் ஆலயத்திற்கு முன்பாக)

தலேமையகம் :

பேர்ள் லேட்ஸ் - அம்பலவாணர் சன்ஸ்

78, மலிபன் வீதி, கொழும்பு 11.

போன் : 24821 — 28244

லெட்சுமிபவான்,

97, ஒல்ஹொட் மாவத்த, — — கொழும்பு - 11




## "அடடா! எஸ்-லோன் குழாய் ஒன்று எப்படி இந்த மகாராஜா இன்வெஸ்ட்மென்ட்ஸ் விளம்பரத்தில் நுழைந்தது?"

வேண்டுமென்றே நாம் செய்த வேலை அது - ஓர் உண்மையை நிலைநாட்ட! மகாராஜா நிறுவனத்தின் தொழில் துறையில் எஸ்-லோன் குழாய்களும் அங்கம் வகிக்கின்றன – மகாராஜா இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவனம் எப்படியோ, அப்படியே!

எஸ்-லோன் குழாய்களின் விற்பனை பெருகப் பெருக, மகாராஜா நிறுவனமும் முற்றாக வளர்கிறது. அப்போது, மகாராஜா இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவனத்தின் பின்-பலமும் அதிகரிப்பது இயற்கை தானே! அதன் நிலைப்பாடும் வலுத்திறது! (ஏனெனில், ஒரு நிதி நிறுவனத்துக்கு அது பெறும் பின்-பலமே ஆதாரமல்லவா?)

எனவே, எம்மிடம் முதலீடு செய்ய, உங்கள் நம்பிக்கைக்கும் மேலாக வேறும் அதிக காரணங்கள் இருக்கின்றன.

### கவர்ச்சியான வட்டி விகிதங்கள் — 27% வரை

| கால எல்லை | வட்டி விகிதம் | | |
|---|---|---|---|
| | ரூ. 500/-க்கு அதிக முதலீடு | | ரூ. 1 லட்சத்துக்கு அதிக தொகை மீது கணக்குப் பூர்த்தியானதும் செலுத்தும் தொகை |
| | மாதாந்தம் செலுத்தும் தொகை | பூர்த்தியானதும் செலுத்தும் தொகை | |
| 6 மாதங்கள் | — | 18% | 21% |
| 12 மாதங்கள் | 21% | 22% | 23% |
| 24 மாதங்கள் | 23% | 25% | 27% |

### எங்கள் இயக்குனர் சபை உறுப்பினர்

திரு. ஆர். மகாராஜா, நிர்வாக அதிபர்
திரு. ஆர். ராஜமகேந்திரன், நிர்வாக அதிபர்
திரு. வீ. என். குமாரஸ்வாமி, எவ்சீஏ (இங்.; வேல்ஸ்), ஏசீஐஐ (இங்., எம். இன்ஸ்ட். ஏஎம் (இங்.), ஏஎம்பீஐஎம் (இங்.), எவ்சீஏ (இலங்கை)
திரு. பி. மகிந்தா, பீஎஸ்சீ (சிறப்பு)
திரு. வீ. சண்முகம், எல்எல்பீ (லண்டன்) சிறப்பு, ஏஐபீ (லண்டன்), வழக்கறிஞர்
திரு. டீ. ஜே. குணவர்த்தன, பீஎஸ்சீ, ஏசீஏ, ஏசீஎம்ஏ.
திரு. டபிள்யூ. பஸ்நாயக்க, எம்பிஐஎம் (இங்.)
திரு. ஈ. குணசேகர

### உடனடிப் பணச் செலுத்தல்

தாமதமே கிடையாது. முற்றிலும் கம்பியூட்டர் கருவிக் கணக்கு முறை கொண்ட நிதி நிறுவனம் எங்களுடையது மட்டுமே! எனவே, உடனே பணமும், துரித சேவையும் நீங்கள் பெறுவது நிச்சயம்.

### எங்கள் நிதி நிர்வாகச் சிறப்பு நிலை

| | 1978/79 ரூபாய் | 1979/80 ரூபாய் | 1980/81 ரூபாய் |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | 250,000 | 250,000 | 750,000 |
| உபரித் தொகை | 246,615 | 1,893,642 | 2,835,255 |
| வைப்பீடுகள் | 11,325,480 | 42,139,162 | 66,938,481 |
| கடன்கள் | 10,175 | 1,811,350 | 5,139,382 |
| வங்கியில் இருப்புத் தொகை | 2,008,816 | 6,423,791 | 8,973,105 |
| வரிக்கு முன் இலாபம் | 667,461 | 2,135,874 | 1,946,188 |
| வரிக்குப் பின் இலாபம் | 453,777 | 1,635,873 | 1,629,687 |
| பங்குதாரர் உரிமைத் தொகை | 250,000 | — | 187,500 |

### எங்கள் தொழில் துறைகள்

பழுதற்ற இலாபத்தை உறுதிப்படுத்தும் துறைகளிலேயே உங்கள் பணத்தை நாம் முதலீடு செய்கிறோம். ஆயினும் உறுதியை நம்பி நாம் குருட்டாம் போக்கில் செயற்படுவதில்லை. நம் முதலீட்டுத் துறைகளில், தொழில் துறைக்கான இயந்திரக் கருவி, மூலப் பொருள் இறக்குமதி, தொழில் வாகனத் தவணை முறைக் கொள்வனவு, காப்புறுதி முதலியன அடங்கும்.

தற்போது இலாபகரமான புதிய துறைகளிலும் முதலீடு செய்யத் தொடங்கியுள்ளோம்.

### மகாராஜா நிறுவனத்தின் ஏனைய தொழில் துறைகள்

- எஸ்-லோன் பீவீசீ குழாய்கள்
- அங்கர் பால் பவுடர், பண்ணைப் பொருள்கள்
- ரெபெக்கா லீ, ப்ளெக் நைட் ஒப்பனைப் பொருள்கள்
- ஒரும்ஃ போம், ஃபொர்ஹான்ஸ் பற்பசைகள்
- ஜோன்ஸ் தளவாடங்கள்
- சிட்டிசன் கைக் கடிகாரங்கள்
- பொலரொய்ட் கமராக்கள்

மற்றும் பல துறைகள்.

## மகாராஜா இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட்

**மகாராஜா நிறுவனத்தின் பின்-பலம் கொண்டது.**

23.9.'76-ல் நிறுவப்பட்டது.

தலைமைச் செயலகம்: 347, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
(தொலைபேசி: 34133; 29747) பதிவு செய்த அலுவலகம்: 54, பெங்ஷால் வீதி,
கொழும்பு 11. கிளை அலுவலகம்: 122, கே.கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (தொலைபேசி: யாழ்ப்பாணம் 8267.)

HTL MI 1106 S

# “பயிர்களுக்கு ஒரேவிதமான இருமிநாசினி பயன்தராது

## கருத்தரங்கில் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

முதல் நாள் ஒரு கிளாஸ் சாரயத்தை குடிக்கின்ற ஒரு மனிதன் நாளடைவில் ஒரு நாளைக்கு ஒரு போத்திலையும் குடித்து விடுகிறுன் இதே போல பயிர்களில் உள்ள பூச்சி புழுக்கள் கிருமிநாசினிகளில் பயிற்றப்பட்டு கட்டுப்படுவ தில்லை. எனவே ஒரே விதமான ஒரே அளவுகிருமிநாசினிகளைத் தொடர்ந்து பயிர்களுக்கு தெளிப்பதால் பயிர்களில் இருக்கும் புழுக்களை அழிக்க முடியாது.

இவ்வாறு புதன்கிழமை மாலை உரும்பராய் சைவத் தமிழ்வித்தியாசாலையில்நடந்த இளைஞர் விவசாயக்கருத்தரங் கொன்றில் உரையாற்றிய விவ சாயப்போதனசிரியர் திரு.கே. எஸ். நடராசா விவசாயிகளுக்கு கருத்துரை வழங்குகையில் தெரிவித்தார்.

உரும்பிராய் கமச்செய்கைக் குழுவின் தலைவர் திரு. எஸ். ஐயாத்துரை தலைமையில் நடந்த மேற்படி கூட்டத்தில் உரும்பராய் கிராமோதய சபைத்தலைவர் திரு ந. அரிய ரத்தினம் உட்பட விவசாயி கள் பலரும் கலந்துகொண்ட னர், விவசாயிகளின் கேள்வி களுக்கு பதிலளித்து உரை யாற்றிய விவசாயப்போதனசி ரியர் திரு. நடராசா தொடர் ந்து பேசுகையில்,

வெண்காயம் வைத்து ஐந்து நாட்களின் பின் 44 நாட்கள் வரை அதாவது வெண்காயத் தாள்கள் முற்றும்வரை ஐந்து நாட்களுக்கு அல்லது ஏழு நாட்களுக்கு ஒருதடவை தொடர்ச்சியாக கிருமிநாசினி தெளிக்கவேண்டும்.

இதற்குபொருத்தமானதும், புழுக்களையும், முட்டைகளை யும் அழிக்கக்கூடிய மருந்து வகைகளை மாறி மாறிதெளிக்க வேண்டியது மிக அவசியம் என்றுர். ஒரேமருந்து ஒரே அளவுகலவையில் தெளித் தால் புழுக்களைக்கட்டுப்படுத்த முடியாதிருக்கும். ஆகவேவேறு வேறு மருந்துகளை பொருத்த மான முறையில் பயன்படுத்த வேண்டும் என்றுர்.

கிராமோதய சபைத்தலைவர் திரு. ந அரியரத்தினம் நன்றி தெரிவித்துப்பேசுகையில் விவ சாயிகளின் நலன்களைக்கருத் தில் கொண்டும், விவசாய உற்பத்தியின் உயர்வைக்கருத் திற்கொண்டும் விவசாயஇலாக விவசாயிகளை நாடி இது போன்ற ஆலோசனைகளையும், கருத்துக்களையும் விரிவான முறையில் செய்யவேண்டும் என்றுர். (வண்.தி.]

---

# நூல் ஆசிரியருக்கு அளிக்கப்பட்ட ஆதரவு

[சுழிபுரம்]

‘,நூல் ஆசிரியர் ஒருவர் தக்கவாறு ஆதரிக்கட்படுவது இங்கே தான் முதல்முறையாக நடைபெறுகின்றது என்பதை நான் துணிந்து கூறுவேன். எழுதிய நூலை பொறுப்பேற்று அச்சிடும் செலவை பொதுமக் களிடம் திரட்டி இப் பணியை நிறைவுபடுத்துவது பாராட் டத்தக்கதாகும்.’’

இவ்வாறு இளைப்பாறிய ஆசி ரியர் திரு இ, ஆறுமுகம் விச வத்தனை முருகன் பிள்ளைத் தமிழ் நூல் வெளிமீட்டுக்குழு வினர் நடாத்திய ஒரு வைப வத்தில் கலந்து கொண்டுபேசு கையில் குறிப்பிட்டார். திரு, ப. சி. செல்வநாயகம் தலைமை யில் கூட்டம் நடைபெற்றது, நூல் அச்சிடும் செலவில் ஒரு பகுதி முற்பணமாக வழங்கப் பட்டது. இவ் வைபவத்தில் நூல் ஆசிரியர் பண்டிதர் அ. ஆறுமுகம் நூல் பாடல்களை விளக்கிப்பாடினர். ஓதுவார் மு. கிருஷ்ணபிள்ளை,பண்டிதர் பொன். பாக்கியம் மற்றும் பலர் பேசினர். நூல் வெளி யீட்டுச்சபை செயலாளர் திரு, க. வாமதேவன் நன்றியுரை கூறினர்,

---

## கிராமோதைய சபை தலைவர்களுக்கு பயிற்சி

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்டத்தில் அங்கு ரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டுள்ள கிராமோதய சபை களின் தலைவர்களுக்கான பயிற் சிக் கருத்தரங்கு எதிர்வரும் 11ம் திகதி செவ்வாய்க்கிழமை யன்று அச்சுவேலி கிராமாபி ருத்தி பயிற்சிப் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகவுள் ளது.

இதற்கான அறிவித்தல்களை யாழ். உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் சகல கிராமோதைய சபைத் தலை வர்களுக்கும் அனுப்பிவைத் துள்ளது. தொடர்ந்து நான்கு தினங்கள் இப்பயிற்சிக் கருத் தரங்கு நடைபெறவுள்ளது.

---

## காமினி மன்னர் வருவார்

[மன்னர்]

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு' காமினி திச நாயக்கா இம்மாதம் 17ம், 18ம் திகதிகளில் மன்னருக்கு விஜயம் செய்வார்.

இவர் முசலி, மாந்தை, இலுப்பைக்கடவை, கட்டுக் கரை போன்ற நீர்பாசனத்திட் டங்களைப் பார்வையிடுவார்.

---

## தாக்கப்பட்டார்

(மன்னர்)

மன்னர் கூட்டுறவு உதவி ஆணையாளரின் நிர்வாக உதவி ஆணையாளர் ஒருவர் கடந்த சனிக்கிழமை மன்னர் வாராந் தச்சந்தைக் கருகில் வைத்து பலமாகத் தாக்கப்பட்டார்.

இவர் மன்னர் கச்சேரியைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒரு வரால் தாக்கப்பட்ட தாகக் கூறப்படுகின்றது.

இத்தாக்குதல் சம்பவம் பற்றி மன்னர் பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்,

தாக்குதலுக்குள்ளான மன் னர் கூட்டுறவு உதவி ஆணை யாளரின் நிர்வாகஉதவி ஆணை யாளர் மன்னர் மாவட்ட பல நோ கூ. சங்கங்களில் இடம் பெற்ற ஊழல்கள், மோசடி கள் ஒழுங்கீனங்கள் பற்றி விசாரணை மேற்கொண்டு வந்தாராம்.

---

### பனம்பொருள் அபிவிருத்தி சபையின்

# பனைவள மேம்பாட்டு முயற்சிக்குப் பாராட்டு

(மன்னர்)

மன்னர் மாவட்டத்தில் பல் வேறு அபிவிருத்தி வேலைகளை செய்ய முன்வந்தமைக்கு பனம் பொருள்” அபிவிருத்திசபையை நான் பாராட்டுகிறேன். சங்க காலத்தில் இருந்தே தமிழ் மக் களுடன் பன்னிப்பிணைந்துள் ளது பனை. சங்க காலப்பாடல் களே இதற்கு சான்று பகர் கின்றன. சத்திமுற்ற புலவர், கம்பன் போன்ற பல்வேறு புல வர்கள். தமது செய்புள்களில் பனையை உதாரணப்படுத்திப் பாடியுள்ளார்கள். இவ்விதம் பெருமைப்படுத்தப்பட்டுள்ள பனையின் குணத்தை மன்னரில் பயன்படுத்த இதன்மூலம மன் னர் மாவட்ட மக்கள் பொரு ளாதாரவளத்தைப் மேம்படு த்த நடவடிக்கை எடுத்துவரும் பனம்பொருள் அபிவிருத்தி சபை தலைவர் திரு. சு.நடரா சாவின் பணியை மிகவும்பாரா ட்டுகிறேன்.

இவ்வாறு பனம்பொருள் பயிற்சி நிலையத்துடன் இணை ந்த கொள்வனவு நிலையத்தை மன்னரில் திறந்து வைத்தமன் னர் பாராளுமன்ற உறுப்பி னர் திரு. பி.எஸ் சூசைதாசன் உரையாற்றினர். இவ்வைப வம் மன்னர் மாவட்ட அர சாங்க அதிபர் திரு. வாமதே வன் தலைமையில் நடைபெற் றது,

பனம்பொருள் அபிவிருத்தி சபைத்தலைவர் திரு.கே. நட ராசா பேசுகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள இயற்கை மூலவளங்கள் கடல் வளமும் பனைவளமும் ஆகும். இதில் பனைவளம் மன்னர் மாவட்டத்தில் தேடுவாரற்று கிடக்கின்றன். இவ்வளத்தைப் பயன்படுத்தும்வகையில் திட்ட மிட்டுச்செயல்பட்டு இம் மாவ ட்டத்தில் பலவேலைவாய்ப்பு அபிவிருத் நடவடிக்கைகளைத் துரிதகெதியில் மேற்கொள்ளு மாறு சபைக்கு பொறுப்பான பிரதேச அபிவிருத்தி அமைச் சர் என்னைப் பணித்துள்ளார். இதன் அடிப்படையில் இன்று பனம்பொருட் சபை பயிற்சி நிலையத்தையும், விற்பனவுநிலை யமானகற்பகத்தையும் திறந்து வைப்பதில் சபை மகிழ்வுறுகி றது. தொடர்ந்து கிராமியரீதி யில் பனைவளத்தைப் பயன் படுத்தத்தக்க செயற்திட்டங் களையும் மன்னரில் மேற் கொள்ளவுள்ளோம். அத்து டன் ஓரிரு மாதங்களில் ஆரம் பிக்கப்படவுள்ள தும் புத் தொழிற்சாலையிலும் பலருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க வுள்ளோம் எனக் கூறினர்.

மன்னர் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு எஸ் தீவ கலாலாவின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

---

### பாலர் பாடசாலை

## ஆசிரியைகளுக்கு பயிற்சி வகுப்பு

[பண்டத்தரிப்பு]

யாழ். தேசிய கூட்டுறவுச் சபை பாலர் பாடசாலை ஆசிரி யைகளுக்கான ஒன்பது மாத கால பயிற்சி வகுப்பு ஒன்றை கடந்த ஏப்ரல் மாதம் தொடக் கம் ஆரம்பித்துள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள 22 பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்க ளின் மகளிர் குழுக்கள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட சுமார் 62 பேர் இப்பயிற்சி வகுப்பில் பங்குபற்றி வருகின்றனர் இப் பயிற்சியில் கலந்து பயிற்சி பெற்று வெளியேறுபவர்களு க்கு தேசிய கூட்டுறவுச் சபை சான்றிதழ்களை வழங்குமென் றும், இலவசமாகவே இந்த பயிற்சி வகுப்புகள் நடாத்தப் பட்டு வருவதாகவும் யாழ்ப்பா ணம் தேசிய கூட்டுறவுச் சபை யின் செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் தெரிவித் தார்.

---

## மே தினம் முடிந்த பின்பே பதில் வந்தது

[பண்டத்தரிப்பு]

கடந்த மே தினத்தன்று யாழ். நகரில் மே தின ஊர் வலம் நடாத்த தமது கட் சிக்கு அனுமதி தருமாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி [இடது] ஜனதிபதியிடம் கேட்டு விண்ணப்பக் கடித மொன்றை அனுப்பியிருந் தது.

‘‘உங்கள்கோரிக்கை கவ னிக்கப்படும் என்று ஜனதி பதி அவர்கள் உங்களுக்கு தெரிவிக்குமாறு பணித்திருக் கிறுர்.’’ என்ற பதில்க்கடி தம் மே தினம் எல்லாம் முடிந்து இம்மாதம் 4-ம் திகதியன்று மேற்படி கட்சி யினருக்கு ஆறுதலாக வந்து சேர்ந்ததாம். இத்தகவலை மேற்படி கட்சியின் தலைவர் தோழர் கே. ஏ, சுப்பிரமணி யம் தெரிவித்தார்.

---

## ‘நுணசை முருகமூர்த்தி’ வரலாற்று நூல்

[பண்டத்தரிப்பு]

மாதகல் நுணசை முருக மூர்த்தி கோவில் இரதோற்ச வத்தை முன்னிட்டு மாதகல் நாவலர் சன சமூக நிலையம். ‘மாதகல் நுணசைத் திருப்பதி’ என்னும் வரலாற்று நூல் ஒன்றை வெளியிட்டுள்ளது. திரு. ச. அருள்சுப்பிரமணியம் இந்த நூலை எழுதியுள்ளார்.


பரபரப்புடன் தயாராகிறது !

சித்திர கதை பத்திரிகை உலகிலே

ஒரு துருவ நட்சத்திரம்



பாரதி

சிறப்பாசிரியர் எஸ் பி சாமி

ஜூன் மாதம் 5-ந் தேதி இலங்கை எங்கும் பவனி வருகிறது

காதல், வீரம், திகில், தீரம் நிறைந்த

துப்பறியும் மர்மச் சித்திரத் தொடர்

கதைகள், சினிமா செய்திகள், பரிசுப் போட்டிகள்,

மற்றும் டீன் ஏஜி'னர் விரும்பும் பல்சுவை அம்சங்களுடன் தயாராகிறது பாரதி

பிரபல ஓவியர் ‘சந்ரா’வின் கைவண்ணம் ஒவ்வோர் இடத்திலும் பளிச்சிடுகிறது

வண்ணப்பிரதி ஒன்றின் விலை 2-50 ரூபா மட்டுமே

அறிமுக அட்டை அளவிலான பேனுநண்பர் படங்கள் குறிப்புகளுடன் வரவேற்கப்படுகின்றன.

இலங்கை எங்கும் விற்பனையாளர் தேவை

விபரங்களுக்கு :

பாரதி எஸ். பி. இன்டெர்நெஷனல் லிமிட்டெட்

529/19, புளுமென்டால் வீதி, கொழும்பு-13.

3119



திருமணம்

பிறந்த நாள்

வரவேற்பு வைபவங்கள்

பூப்புனித நீராட்டுவிழா

மற்றும் மங்கள வைபவங்களை

இயற்கை வர்ணக் கலரில்

வீடியோ

படப்பிடிப்பு செய்திட

தொடர்புகொள்ளுங்கள்

முகாமையாளர்

த பிறுன்ஸ் கம்பனி லிமிட்டெட்

9, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 7680

மூன்ருவது வாரம்
ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
தில்லுமுல்லு

Regal Jaffna
Daily 10-30, 2-15, 4-30, 7-00 9-30
CHARLES BRONSON
BREAKOUT

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ராஜாவீட்டுப் பிள்ளை
[புதிய பிரதி]

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
சிவாஜி—ஸ்ரீதேவி
பட்டாக்கத்தி பைரவன்
(புத்தம்புதிய பிரதி)

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15, 9-45
புதிய பிரதி)
சிவாஜி மகாகவி காளிதாஸ்
எதிர்பாருங்கள் கடல்மீன்கள் [கலர்]

ராணி தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
(யாழ். நகர்)
முன்பு காணத் தவறியவர்களுக்கு மீண்டும்
கண்டுகளிக்க கிடைத்த அரிய சந்தர்ப்பம்!
பாக்கியராஜ் - ரதி நடித்த
புதிய வார்ப்புகள்
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய பிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
2-வது மாதமாக (சில தினங்கள் மட்டும்)
ஸ்ரீ பிரியா, சுபாசினி, கமல், ரஜனி, நாகேஷ்
இன்னும் பல நட்சத்திரங்கள் நடித்த
நட்சத்திரம்
(ஈஸ்ட்மன் கலர்)

RAJAH Daily at 10-30, 2-00, 4-30
7-00 and 9-30
(Jaffna) SHIRLY EATON
FUTURE WOMEN
(Strictly for Adults - Scope Color)
கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
ரஜனிகாந்த—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)


# புதுப்பாதையில் செல்லும் பாடசாலை

(துணுக்காய்)

மல்லாவி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர் மன்றத்தின் கையெழுத்துப் பிரதி நூல் வெளியீட்டு வைபவம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. துணுக்காய் உதவிஅரசாங்கஅதிபர் திரு. க. குலேந்திரா இந் நூலை மாணவர் மன்றத்தலைவருக்கு வழங்கி வெளியிட்டு வைத்தார். இந்நூலை பத்திராதிபர் செல்வன் ப. பத்மகாந்தன் திரு. க. குலேந்திராவிடம் ஒப்படைத்தார்.

வெளியீட்டு வைபவத்தில் உதவி அரசாங்க அதிபர் பேசுகையில் இப் பாடசாலையின் வரலாற்றிலே இன்று மிகவும் முக்கியமான தினமாக அமைகின்றதெனவும் இப்பாடசாலை பல்வேறு வகையான புதுப் பாதைகளில் சென்று ஏனைய பாடசாலைகட்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைவதுடன் தன்னையும் வளர்த்துக் கொள்கின்றது என்ருர். செல்வன் க. லோகநாதன், அதிபர் திரு. செ மயில்வாகனம், க. செல்வரத்தினம் ஆசிரியர், செல்வி இ. கணபதிப்பிள்ளை ஆகியோர் விமர்சன உரையாற்றினர். மன்றத்தலைவர் த. யோகானந்தராஜாவின் தலைமையில் நடந்த இவ்வைபவம் செயலாளர் பொன். வரதராஜனின் நன்றியுரையுடன் முடிந்தது.

## மாலைதீவு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மாலைதீவு குடியரசானபின்பு பிரிட்டனிற்கு முதல் முறையாக விஜயம் செய்யும் ஜனாதிபதி இவராவார்.

மாலைதீவு பிரித்தானிய குடியேற்ற நாடாக 85 வருடங்கள் இருந்து 1968ம் ஆண்டு குடியரசானது தெரிந்ததே. (கு


வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2.30, 6.15 9.15
சுதாகர் – ராதிகா
சுவர் இல்லாத சித்திரங்கள்


# வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்க ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

தெங்கு பனம் பொருட்களில் உற்பத்தித்துறையில் கூட்டுறவு துறை அறிமுகப்படுத்தப்பட்டு தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்ட பத்தாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுமுகமாக இச்சங்கங்களில் சமாசம் ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளது. இவ்விழா இம் மாதம் இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

இவ்விழாவினை ஒட்டிப் பல்வேறு போட்டிகளும் இச் சமாசத்தினல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. வடமாகாண ரீதியில் சிறுகதை, கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளும் நீண்டதூர சைக்கிள் ஓட்டப் போட்டி ஒன்றும் நடத்தப்படவுள்ளன.

சைக்கிள் ஓட்டப்போட்டி இதுவரை யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படாத அளவு பிரமாண்டமானதாகவிருக்குமென்றும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து மானிப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, சுன்னுகம், கோப்பாய், அச்சுவேலி, நெல்லியடி, பருத்தித்துறை, பளை, கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய இடங்களுக்கூடாக மீண்டும் யாழ்ப்பாணத்தை அடைவதாகவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக்கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள், பணியாளர்கள் இடையிலான மரதன் ஓட்டப்போட்டி, நாடகப்போட்டி ஆகியனவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன, இவ்விழாவின் போது கூட்டுறவு முறையின் வரலாறு. இக்கால கட்டத்தில் தெ. ப. பொ. கூ. சங்கங்களின் சாதனைகள் ஆகியவற்றை விளக்கவல்ல மலர் ஒன்றும் வெளியிடப்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## பட்டிமன்றத்தின் முடிவு

[சுழிபுரம்]

பாரதி தேசியக் கவிஞனா? தெய்வீகக் கவிஞனா? என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்தில் பாரதி தெய்வீகக் கவிஞன்தான் என்ற தரப்பினரிவாதம் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

பாரதி விழாவை யொட்டி காரைநகர் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற பட்டிமன்றத்திற்கு புலவர் பொன் தெய்வநாயகி சோதி நடுவராகப் பணியாற்றினர். தெய்வீகக் கவிஞன் என்பது சார்பில் திரு. எஸ். ஜெயராசா, பண்டிதர் ப. இராசகுரு, பண்டிதை யோகா சோமசுந்தரமும், தேசியக் கவிஞன் என்னும் சார்பில் திரு. சி. குமரன், எ. ரி. செல்லையா, புலவர் திருமதி பூ. ஏனதிநாதன் ஆகியோர் வாதிட்டனர்.

# இவ்வருடம் 'மஹாபொல' மூலம் 1000பேர் பயனடைவர்

(நுவரெலியா)

''கடந்த ஆண்டில் 800 மாணவர்கள் 'மஹாபொல' புலமைப்பரிசில்களைப் பெற்றுப் பயனடைந்தனர். இவ்வாண்டு ஆயிரத்துக்குமதிகமான மாணவர்களுக்கு உயர் கல்வி பெறும் வாய்ப்பினை மஹாபொல புலமைப் பரிசில்கள் மூலம் வழங்கப்படும்.''

இவ்வாறு வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நுவரெலியாவில் நடைபெற்ற 48வது மஹபொலவின் இறுதிநாளன்று உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அமைச்சர் திரு, அத்துலத்முதலி மேலும் அங்கு பேசுகையில்: ''பல வெளிநாடுகள் மஹாபொல திட்டத்தைநன்கு பாராட்டியுள்ளன. அரசாங்கம் வறிய மாணவர்களுக்கு உதவும் வகையில் செயற்படுத்திவரும் இத்திட்டத்துக்கு மக்களும் தமது பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்ருர்.

இவ்வைபவத்தில் அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா உரையாற்றுகையில்; இன்றைய ஆட்சியில் எமது நாட்டவர் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று உழைக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்கள் சம்பாதித்தவற்றையும் இங்கு கொணடுவரச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. இதனல் பலர் காணிகளையும், வீடுகளையும் வாங்கியுள்ளதோடு தமக்கு வேண்டிய பொருட்களையும் வாங்கிவந்துள்ளனர் என்ருர். (கி)

## மூளாய் வைத்தியசாலை செயல்படுகிறது

(சுழிபுரம்)

மூளாய் ஐக்கிய கூட்டுறவு வைத்தியசாலைமீண்டும்பழைய நிலையில் செயல்பட ஆரம்பித்துள்ளது. சகல வைத்திய சேவைகளும் செயல்படுவதால் தினமும் நோயாளர் தொகை அதிகரித்துள்ளது.

## பறிமுதல்

(மன்னர்)

மன்னர் மாவட்டத்தில் கடல்தொழில் அமைச்சின் சிபார்சின் பேரில் வங்கிக்கடன் மூலம் இயந்திரப் படகுகளை கடன் அடிப்படையில் பெற்று உரிய காலத்தில் கட்டுப் பணத்தை செலுத்தாதவர்களின் இயந்திரப்படகுகள் வங்கியினல் பறிமுதல் செய்யப் பட்டுவருகிறது, (கு)

# சுவாமி தரிசனம் செய்கையில் தாலிக்கொடி மறைந்தது!

(பண்டத்தரிப்பு)

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில் இரதோற்சவம் சென்ற வியாழக்கிழமை நடைபெற்றபோது உள்வீதியில் சுவாமி தரிசனம் செய்யச் சென்ற வயோதிபமாது ஒருவரின் 22 ஆயிரம் ரூபா பெறுமதிக்க தாலிக்கொடி காணுமல் போய்விட்டது.

மாதகலைச்சேர்ந்த திருமதி இராமலிங்கம் என்னும் பிரஸ்தாப பெண் ஆலய உள்வீதியில் சுவாமி தரிசனம் செய்து அர்ச்சனை செய்துவிட்டு பலத்த சனநெரிசலின் மத்தியில் வெளிவீதிக்கு வந்தபோது தாம் அணிந்திருந்த 11 தங்கப்பவுண் நிறையுள்ள கொடியைக்காணுது அதிர்ச்சியடைந்தாராம். பல இடங்களில் தேடியும் காணுமல் போகவே இதுபற்றி காங்கேசன்துறைப் பொலிஸ்நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.


யாழ். மனோகராவில்
ஹவுஸ் புல் ! ஹவுஸ் புல் !! ஹவுஸ் புல் !!!
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
இந்தியாவில் 250 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றிவாகை சூடியதுடன்
வெள்ளி விழாவில் பரிசு பெற்ற சிறந்த காதல் காவியம்.
கார்திக்
ராதா
தியாகராஜன்

இன்னும்
பலர்
திறம்பட
நடித்த
பாரதிராஜாவிற்கு திரைப்பட உலகில் ஒரு நிலையான இடத்தைப்
பெற்றுக்கொடுத்திருக்கும் காதல் காவியம் தான்
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)
காட்சி நேரங்கள் குறிப்பிடமுடியாதபடியால் ஆசனங்களுக்கு முந்துங்கள்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

L. D. வான் பெட்போட் வான் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. சிறிதரன் மரக்காலை, 438, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3090

கிணற்றுடன் ஒன்றரைப் பரப்பு சற்சதுரகாணி. வீடு கட்டுவதற்கு உகந்தது. தொடர்பு: 34, புங்கங்குளம் வீதி. கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7855. 3104

## தேவை

தச்சுவேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. மரக்கடைச்சல் (ரொயிஸ்) வேலை செய்வதற்கு இரு ஆட்கள் தேவை. (இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்) விளம்பர இல: 3091, மே/பா ''ஈழநாடு'' யாழ்ப்பாணம். 3091

Refrigerator Technicians குளிர்சாதனப்பெட்டி மெக்கானிக்குகள். குளிர்சாதனப் பெட்டிகள் திருத்துவதிலும், பெயின்ற் அடிப்பதிலும் நன்கு அனுபவமுள்ள மெக்கானிக்குகள் உடன் தேவை. திருப்திகரமாகச் சேவை செய்தால் உற்பத்திச்சாலையில் பயிற்சி அளிப்பதற்குக்கூட ஒழுங்கு செய்யப்படும். அனுபவத்தையும், எதிர்பார்க்கும் சம்பளத்தையும் குறித்து, நற்சான்றிதழ்களுடன் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்; 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3095

யாழ். மாநகர எல்லைக்குள் சிறிய குடும்மொன்றிற்கு தனியாகவோ அல்லது பகுதியாகவோ வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு கொள்க:- க. யோ. ராணி, கோண்டாவில் ரேட், கோப்பாய்தெற்கு, கோப்பாய். 3133

## விற்பனைக்கு

கடைக்கு உரிய கண்ணடி அலுமாரி (சோக்கேஸ்) நீளம் 12 அடி. உயரம் 7 அடி. எந்தக் கடைக்கும் ஏற்றது. றிங்கோ சயிக்கிள் வேக்ஸ், கஸ்தூரியார் சந்தி, 195, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 3125

இயக்கச்சியில் தென்னஞ் செய்கைக்கு உரிய 50 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: க. மகேசன், 286, நாவலர் வீதி, கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். 3129

புதிய சினிமாப் படப் பாடல்கள்—பயணங்கள் முடிவதில்லை, அழகிய கண்ணே ஆனந்தராகம், நல்லது நடந்தே தீரும், வா கண்ணு வா, தனிக்காட்டு ராஜா, போச்கிரி ராஜா, ஓம் சக்தி, பிள்ளையார், வேடிக்கை மனிதர்கள், இரட்டை மனிதன் —இன்னும் பல முந்தைய வெளியீடுகள் மூன்றும் பிறை, வாழ்வே மாயம், மெட்டி, காற்றுக்கென்ன வேலி, மற்றும் எல்லாத் தமிழ்ப் படப் பாடல்களும் ''துர்க்காஸ்'' 68, கே. கே. எஸ். வீதி, சுண்ணாகம். 3128

## வகுப்பு

எயர் கொண்டிசன் புதிய வகுப்பு 10 – 5 – 82 – ல் ஆரம்பமாகின்றன. விபரங்கட்கு:- Auto Cool Engineers, கந்தப்பசேகரம் வீதி (சாந்தி சினிமா முன்பாக) யாழ்ப்பாணம். 3085

## பயிற்சி

ஆறுந்தரத்திலிருந்து பத்தாம் வகுப்பிற்றிகு கணிதபாடத்தில் குறைவாக உள்ளவர்களுக்கு வீட்டிற் சென்று திறமைச் சித்திக்காகப் பயிற்சி அளிக்கப்படும். Mrs. கனகசபை, No. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 3134

## வாடகைக்கு

யாழ். பெருமாள் கோவிலடியில் சகல வசதிகளும், சாப்பாட்டுடன் மாணவிகளுக்கு மாத்திரம் தங்குவதற்கு இடமுண்டு. விபரங்களுக்கு: செயலாளர், மல்ரி சேவிஸஸ், 234, ஆஸ்பத்திரி விதி, யாழ்ப்பாணம். 3088

கொக்குவில் கிழக்கு நாமகள் ஒழுங்கையில் ஆறு, ஏழு மாணவர்கள் தங்குவதற்கு ஏற்ற வீடு வாடகைக்குண்டு. விபரங்களுக்கு சோ. சிவபாதசுந்தரம், துவாரகை, 50, கோணவளை ஒழுங்கை, கொக்குவில். 3124

## WANTED

Efficient Computer Programmers Needed. Apply Advt. No: 3066, c/o Eelanadu, P. O. Box 49, Jaffna. 3066

# தமிழரின் சுதந்திர தாகத்தை....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வேந்தனைப்பற்றிச் சிந்திக்கிறார்கள் நமது தலைவர்கள்.

டாக்டர் தர்மலிங்கம் இயக்கத்திற்காக செய்த உதவிகள் எத்தனை அவற்றை அவர் சொல்லமாட்டார். தந்தை செல்வா கேட்டாராம் இயக்கத்தில் ஈடுபடவரும்படி 'டாக்டக் சொன்னாராம் தென்னங்கன்று வைத்திருக்கிறேன். அது பயன்தந்ததற்குப்பின் வருகிறேன் என்று. இதில்என்ன தவறு. அவர் இவர்களைப்போல் பதில்நேர அரசியல் பேசவிரும்பாதவர். ஓய்வுநாட்களில் மட்டும் அரசியல் பேசாதவர். எனவே தமது பணியினை முடித்துக் கொண்டபின் இதில் ஈடுபட விரும்பியிருக்கலாம்.

அமிர் அவர்கள்தான் செய்த தியாகங்களைப்பற்றி பட்டியல் போட்டு பேசஆரம்பித்திருக்கிறார்கள். நாம் அதைமறுக்கவில்லை ஆனால் இன்றைய இளைஞர்கள் செய்த உயிர்த் தியாகத்தின் முன் இவரது தியாகம் எம்மாத்திரம். 30 வருடங்களாக பாராளுமன்றம் சென்று இவர்கள் சாதித்தது என்ன? கிழக்கு மாகாணத்தில் இரு சிங்களக் குடியேற்றங்கள் அம்பாறை—சேருவல பறிபோயிற்று. அரசிடம் சலுகை மட்டும்தான் பெறவேண்டும் என்றால் அதைப் பெறவேண்டியவர்கள் அரசாங்கக் கட்சிக்காரர்களே அன்றி தமிழர்விடுதலைக் கூட்டணியினர் அல்ல. இன்று தமிழ்த் தலைவர்கள் ஜே. ஆரின் புன்சிரிப்பிலே மயங்கி விட்டார்கள். இவர்களை நாம் பின்பற்ற முடியுமா? தந்தை செல்வா நினைவுதினக் கூட்டத்தில் கத்தோலிக்க மதத்தலைவர் பேசும்போது சொன்னார் எந்த ஒரு தலைவரையும் நீங்கள் நம்பாதீர்கள் ஒவ்வொரு தமிழ் மகனும் தன்னைத்தானே தலைவனாக பெற்றுக் கொள்ளவேண்டும் இந்த மண்ணை நேசிக்க வேண்டும். ஸ்ரீ. குட்டிமணிக்காக சிவசிதம்பரம் வழக்காடுகின்றாராம். ஏன் மற்றைய சட்டத்தரணிகள் எங்கே? மற்றைய சட்டத்தரணிகளுக்கு வாய் இல்லையா? அவர்கள் உழைப்பைப் பெரிதாக்கிக் கொண்டிருக்கிறார்கள். சிவசிதம்பரத்தைச் சந்திக்கின்ற நேரமெல்லாம் ஜே. ஆர். இவரை நிர்ப்பந்திக்கிறாராம்.

விடுதலைப்பணி புனிதமானது. தமிழக அரசியல்போல் இங்கு கொண்டுவராதீர்கள். சரியானதை சொல்லுங்கள் இனத்தை பிளவு படுத்தாதீர்கள். சந்திரகாசனை தலையாட்டி என்று எழுதட்டும் பார்ப்போம் ஒன்று ஒரு கவிஞர் கூறினாராம். வவனியாவிலே நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில அபிவிருத்திச் சபை பற்றிய விவாதத்தில் திரு. சந்திரகாசன் எதிர்த்து வாதிட்டார். அவரிடம்

(8ம் பக்கம் பார்க்க)

# ஏலவிற்பனை

## பழுதடைந்த மிதப்புப் பாதை (FERRYBOAT)

மேற்படி பாவனைக்கு உட்படுத்த முடியாத மிதப்புப் பாதை 11–5–82 முற்பகல் 10.00மணிக்கு காரைநகர்த் துறைமுகத்தில் ஊர்காவற்றுறைப் பகுதி நிறைவேற்றுப் பொறியியலாளரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும்.

நிபந்தனைகள்:-

1. கேள்விக்குரிய முழுத் தொகையையும் அவ்விடத்திலேயே செலுத்தப்படல் வேண்டும்.
2. பணம் செலுத்திய 7 நாட்களுக்குள் அவ்விடத்திலிருந்து அகற்றப்படல் வேண்டும்.
3. தற்பொழுது அவ்விடத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கும் மிதப்புப்பாதையால் செல்லும் வாகனங்களுக்கு எந்தவிதமானசேதமோபாதிப்போ ஏற்படுத்தக் கூடாது.

வி. பத்மநாதன்
நி. வே. பொறியியலாளர்,
ஊர்காவற்றுறைப் பகுதி,
வேலணை.

3110

# அறிவித்தல்

நெடுந்தீவு மாவலித்துறை ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி (பிடாரி) அம்பாள் ஆலயக் கட்டிடத்திருப்பணிக்கான சீட்டிழுப்பு 14–4–82 அன்று நடைபெற்றது. 14–5–82 வரை கோரப்படாத பரிசுப் பொருட்கள் 4–6–82 அன்று ஆலய முன்றலில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

வே. சுந்தரலிங்கம்
தலைவர்
திருப்பணிச்சபை

3131

# வேலைவாய்ப்புக்கள்

உடனடியாக 150 வேலையாட்கள் தேவை. தினசரி 200 ரூபா சம்பாதிக்கலாம்.

பணிப்பெண்கள், மேசன், தச்சுவேலைகள், சாரதிகள், ஹோட்டல் வேலையாட்கள், மெக்கானிக்கர்கள் பிளம்பர், ஆகிய பலதரப்பட்ட வேலைகளுக்கும் நேரில் அல்லது தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

சுபாஷினி அச்சகம்,
353A, 355A கே. கே. எஸ். வீதி,
(மேல்மாடி), யாழ்ப்பாணம்.

3109

# மத்திய கிழக்கு துறைமுக வேலைவாய்ப்புக்கள்

மத்திய கிழக்கு நாடுகளில் பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை. உடனடியாக விண்ணப்பிக்கவும்.

சிவில் எஞ்ஜினியர்ஸ், மெக்கானிக்கல் எஞ்ஜினியர்ஸ், டிராஸ்மென், டிராக்கர் மாஸ்டர்ஸ் (Dredger Masters), டெக்-போர்மன், டெக் கான்ட்ஸ், மெக்கானிக்கல் போர்மன், கிறிஸர்ஸ், எலெக்ரிசன்ஸ், வெல்டர், கிறேன் ஒப்பிரேட்டர், மற்றும் புல்டோசர் ஒப்பிரேட்டர், கூலியாட்கள், சமையல்காரர்கள், மெஸ் போய்ஸ், சுத்திகரிப்பவர்கள், கலி போயிஸ், ஹெல்மென்ஸ், மேசன், தச்சுவேலை செய்பவர்கள்.

விண்ணப்பங்களை சான்றிதழ், பாஸ்போட் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும்.

நேரடியான சகல தொடர்புகளும் தடைசெய்யப்பட்டுள்ளது. தரகர்கள் தேவையில்லை. நேரடித் தொடர்புகொண்டால் மனு நிராகரிக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் கிடைக்கப்பெற்றதும் தகவல் மறு கடிதத்தில் அறிவிக்கப்படும்.

''கடிதத் தொடர்புகளை ஆங்கிலத்தில் எழுதவும்''

**Construction & Development Co. Ltd,**

37, S. De. S. Jeyasinghe Mawatha, Nugegoda.

தொழில் லைசென்ஸ் இல: 96

தொழில் ஆணையாளர் பதிவிலக்கம்: FE/1/118

3114

# அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

மூளாய் சித்தி விநாயகர் முத்துக்குமாரசுவாமி தேர்த்திருப்பணிச் சபையினரால் 6–5–82 அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு வெற்றிபெற்ற இலக்கங்கள்:

1ம் பரிசு: H 523
2ம் பரிசு: D 725
3ம் பரிசு: E 418

ஆறுதல் பரிசுகள்:
B 981, F 946,
D 96‸. L 665,
F ‸05, H 584,
L 407, F 343,
E 382.

அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களுக்குரிய பொருட்களை 31–5–82க்கு முன் எடுக்கப்படாவிட்டால் திருப்பணி நிதியில் சேர்க்கப்படும்

தேர்த்திருப்பணிச்
சபையினர்,
மூளாய்,
7–5–82

3130

# நாடக, அரங்கக் கல்லூரியின் நாடகவிழா திகதிமாற்றம்

இன்று (9–5–82) வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகவிருந்த நாடகவிழா கீழ்வரும் ஒழுங்கின்படி பின்போடப்பட்டுள்ளது. முன்னர் பெற்ற பிரவேசச் சீட்டுக்கள் செல்லுபடியாகும்.

29-5-82 — ''கோடை''
11-6-82 — ''பொறுத்தது போதும்''
20-6-82 — ''அபசுரம்''
,, ''குருஷேத்திரோப தேசம்''
27-6-82 — ''சங்காரம்''

5 நாடகங்களுக்குமானசீசன் ரிக்கற் ரூபா. 10

313‸

# மரண அறிவித்தல்

## வேலன் செல்வராசா

உரும்பிராய் மேற்கை பிறப்பிடமாகக்கொண்ட வேலன் செல்வராசா என்பவர் மேற்கு ஜேர்மனியில் 29–4–1982–ல் காலமானார். இவர் வேலன் செல்லியின் மகனும், பூபாலசிங்கம் (கிளி), திருச்செல்வம், கண்மணி, காஞ்சனா, பொன்மணி, புனிதம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவர்.

அன்னாரின் பூதவுடல் 10–ம் திகதி காலை உரும்பிராய் வேம்பன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

3122

பேசாலை - தாழ்வுபாடு

# மீனவர் மோதல்; வாகனங்கள் சேதம்; ஐஸ்வாடிகளுக்கு தீவைப்பு!

## 18 பேர் றிமாண்டில்

(மன்னார்)

பேசாலை- சிறுத்தோப்பு கடற்கரையில் 26 மீனவர் ஐஸ் வாடிகள் தீக்கிரையாக்கப்பட்டது தொடர்பாக பேசாலையைச் சேர்ந்த 17மீனவர்களும், தாழ்வுபாடு பகுதியைச் சேர்ந்த ஒரு மீனவரும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது: பேசாலை கடலில் பேசாலை மீனவர்களால் கரைவலை விரிக்கப்பட்டபோது நீரோட்டத்தில் அள்ளுப்பட்டு விரிக்கப்பட்ட கரை வலை தாழ்வுபாடு மீனவர்கள் தொழில் செய்யும் பகுதிநீருள் சென்றுவிட்டது.

இதனால் வாக்குவாதம் ஏற்பட்டு பேசாலை மீனவர்களுக்கும் தாழ்வுபாடு மீனவர்களுக்குமிடையில் மோதல் ஏற்பட்டது.

இதன் எதிரொலியாக பேசாலையிலிருந்து மன்னாரை நோக்கிச்சென்ற பேசாலைப் பகுதியினருக்குச் சொந்தமான வாகனங்கள் வழிமறிக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டன,

இதனையடுத்து சிறுத்தோப்பு கடற்கரையில் அமைக்கப்பட்டிருந்த தாழ்வுபாடு மீனவர்களுக்குச் சொந்தமான 26ஐஸ் வாடிகள் தீக்கிரையாக்கப்பட்டன. இதனால் சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் உட்பட பல பொருட்கள் சேதமடைந்தன.

இச் சம்பவங்களை யறிந்து ஸ்தலத்திற்கு விரைந்த மன்னார் பொலிசாரும், இராணுவத்தினரும் இரு சமூகத்தினருக்கிடையில் அமைதியை நிலைநாட்டினர்.

அண்மையில் பேசாலையில் உள்ள பிரபல சம்மாட்டி ஒருவரின் வள்ளம் ஒன்று சேதப்படுத்தப்பட்டதுடன் ஐஸ் வாடி ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டது பொலிசாரின் தீவிர நடவடிக்கையினால் அமைதி நிலைநாட்டப்பட்டது. ஒருநாள் இதே வேளையில் இரவு பேசாலை கோவில் மணி ஒலித்ததால் பேசாலைப் பகுதியில் பீதி ஏற்பட்டிருந்தது. தாழ்வுபாட்டைச் சேர்ந்த சிலர் படகுகளில் கடல் மார்க்கமாகவந்து பேசாலைப் பகுதியில் தாக்குதல் நடத்த எத்தனித்ததாலேயே கோவில் மணி ஒலிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பொலிசார் கடற்கரையோரத்திலும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தாழ்வுபாடு மீனவர்கள் எரிந்துபோன தமது ஐஸ் வாடிகளுக்குப் பதிலாக புதிய ஐஸ் வாடிகள் அமைக்க முயன்றதாகவும் அச்சமயம் டைனமெட் வெடி வைத்து ஆவாரம் செய்ததாகவும் மன்னார் பொலிசாருக்குக் கிடைத்த தகவலையடுத்து பொலிசார் அங்கு விரைந்தனர்.


சுபிட்சத்திற்கு வழிகாட்டி

தங்கள் முதலீட்டிற்கு இதோ ஒரு பொன்னான வாய்ப்பு

நம்பிக்கை - நாணயம் - அநுபவம்

SHABRA UNICO FINANCE LIMITED

[இலங்கை மத்திய வங்கியின் அனுமதிபெற்ற ஸ்தாபனம்]

விபரங்களுக்கு:-
61, நியூ புலர்ஸ் வீதி,
கொழும்பு-4

Tele:- 589310


## தமிழரின்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. அமிர்தலிங்கம் பொதுச் சபை ஏகமனதாக இதை ஏற்றுக்கொண்டது என்று நாம் ஏற்றுக்கொண்டு விடுவோம் என்றபோது சந்திரகாசன் இல்லை. இது கொள்கைப் பிரச்னை இதனை வாக்கெடுப்பிற்கு விடுவோம் அதில் நீங்கள் வெற்றிபெற்றாலும் ஒருவராவது இதனை ஏற்கவில்லை என்பதைத் தெரியப்படுத்தவேண்டும் என்றபோது பொதுவாக்கெடுப்பிலே அவரும் அவரோடு 18 பேரும் எதிர்த்து வாக்களித்தார்கள். புதிய பாராளுமன்ற திறப்பு விழாவில் அமிர் அரசிடம் பிச்சை கேட்பதுபோல சங்கிலியன் தோப்பைப் பாதுகாக்க அதிகாரமும், நிதியும் அபிவிருத்தி சபை மூலம் கேட்டிருக்கிறார். அவர்களே அமிர்தலிங்கத்தை அமிர்தசேகராவாக மாற்றுமாறு சொல்லியிருக்கிறார்கள்.

1977 தேர்தலிலே கொழும்பு தெற்குத் தொகுதியில் ஜே.ஆரை எதிர்த்துப் போட்டியிட ஈழவேந்தன் விரும்பினார். அந்த நேரத்தில் நான் திரு அமிர்தலிங்கத்திடம் சொன்னேன் கொழும்பு மக்களின் தன்மானத்தையும், தமிழ் உணர்வையும் சுதந்திர தாகத்தையும் எடுத்துக்காட்ட விடுங்கள் என்றபோது அமிர் மறித்துவிட்டார். அதைத் தவிர வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் அவர்களிடம் சீற் கேட்கவில்லை


கடைசிச்சந்தர்ப்பம்

ஹொண்டா மலிவு விற்பனை

குறைந்த கையிருப்பு மட்டும்.

கடைசித்தினம் 15-05-82

C 90 Rs. 12,510/-
CD 50 RS. 12,150/-
CD 125 T RS. 19,800/-

மகாராஜா இன்வெஸ்ட்மெண்ட் லிமிட்.

122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 8267


# வேலையிலிருந்துதிரும்பியவர் வாள்வெட்டுக்கு இலக்கானார்!

(கோண்டாவில்)

வேலைக்கு சென்று விட்டு வீடு திரும்பியவர் வீதியில் வாள் வெட்டிற்கு இலக்கானார்.

இச்சம்பவம் நாச்சிமார் கோவிலுக்கு முன்பாக உள்ள இராமநாதன் வீதியில் நடைபெற்றது.

மேசன்வேலைக்குசென்றுவிட்டு திரும்பி வந்தவர் ஓர் கடைக்கு முன்னால் நிற்கும் பொழுது வாள் வெட்டிற்கு இலக்கானார். கழுத்து வயிறு பின்புறம், ஆகியவற்றில் பெரும் வெட்டுக் காயங்களுக்கு உட்பட்டவர் மயக்க முற்ற நிலையில் யாழ்ப்பாணம் அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது பற்றி ஸ்தல விசாரணையை மேற்கொண்ட யாழ். பொலிஸார் சந்தேகநபரின் உறவினர்கள் இருவர் அவ்விடத்திற்கு வந்து குழப்பம் செய்து கொண்டிருக்கும்போது இருவரை கைதுசெய்தனர். (க)

## சிறுமி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நகைகளைக் களவாடிய குற்றத்திற்கு 1 வருடகாலக் கடுங்காவல் தண்டனையும் ஒன்றன்பின் ஒன்றாக 3 வருடங்கள் அனுபவிக்கவேண்டுமென நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கில் வழக்காளி தரப்பில் சட்டத்தரணி திரு. ந. ஸ்ரீகாந்தா ஆஜரானார். எதிரி சார்பில் சட்டத்தரணி ப. கதிரவேலு ஆஜரானார்.

## ஆர்ஜென்டீனா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பின் தரித்துள்ளதாக அவதானிகள் தெரிவித்தனர்.

### பிரச்னை தீர்வுக்கு ஆர்ஜென்டீனா பிரிட்டன் முயற்சி

இதேசமயம் போக்லண்ட் பிரனைச்க்குத் தீர்வுகாணப் பிரிட்டனும், ஆர்ஜென்டீனாவும்முயற்சியெடுத்துவருவதாக கூறப்படுகிறது.

ஆர்ஜெண்டீனாத் துணை வெளி விவகார அமைச்சரையும், ஐ. நா. பிரிட்டன் பிரதிநிதியையும் ஐ. நா. பொதுச் செயலாளர் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கின்றார்.

இது இவ்வாறிருக்க போக்லண்ட் பிரச்னை தொடர்பாக லண்டன் பத்திரிகைகளுக்கிடையே பெரும் போட்டி ஏற்பட்டுள்ளது என்றும் போக்லண்ட் பிரச்னையில் சமரச முடிவை ஏற்படுத்தவேண்டும் என்று சில பத்திரிகைகள் தெரிவித்துள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

[க.இ]

## அமெரிக்க தூதருக்கு வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதர் திரு. ஜோன் எச். றீட்டுக்கு யாழ். மாநகர முதல்வரும், சபை உறுப்பினர்களும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை சபையின் செயற்குழு அறையில் தேநீர் விருந்தளிப்பார்கள்.

## கார்-லொறி விபத்து

### ஒருவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

நாச்சிமார் கோவிலுக்கு அண்மையில் கே. கே. எஸ். வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற கார்—லொறி விபததையடுத்துக் கார்ச் சாரதி பலத்த காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த நடராஜா [வயது 23] என்பவரே யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [இ]

## கிரிக்கட் போட்டி இன்று

[இளவாலை]

காங்கேசன்துறை பொலிஸ் கிரிக்கட் அணிக்கும்இளவாலை பத்தாவத்தை புனித பிலிப்பு கிரிக்கட் கழகத்துக்குமிடையே இன்று காலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் மென்பந்து கிரிக்கட் போட்டி ஒன்று நடைபெறுகிறது.

## மோட்டார்---

(1ம் பக்கத்தொடர்ச்சி)

பலத்த காயங்களுடன் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்று மரணமானதாகவும் பொலிஸ்விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (இ)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா தம்பையா

யாழ்ப்பாணம் வைமன் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பையாவின் பாரியார் திருமதி கனகம்மா காலமானார். இவர் குடியேற்றத்திட்ட அதிபர் கோபாலரத்தினம், ராகுலன் டிரான்ஸ்போர்ட் சேர்விஸ் பத்மநாதன், வன்னேரிக்குளம் முன்னாள் கிராம சேவையாளர் பஞ்சாட்சரம், திருமதி தங்கம்மா, திருமதி நல்லம்மா ஆகியோரின் தாயாரும், வர்த்தகர் மூ. ச. மயில்வாகனம், ஈழநாடு பிரதம உதவி ஆசிரியர் சபாரத்தினம், திருமதிகள் சசிகலா, பத்மாவதி, ராஜகௌரி ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று [9-5-82] ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காகக் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 3138


★ துல்லியமான ஒலி. ★ துலக்கமான காட்சி. ★ தெளிவான வர்ணங்கள்.

J. V. C. ரெலிவிஷன்

நொதேண் ரி. வி. சென்ரர்

158, மானிப்பாய் வீதி, (ஈழநாடு முன்பாக) யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் மே மீ 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81. Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.